# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව

இலங்கை மத்திய வங்கி

CENTRAL BANK OF SRI LANKA

## பிரமிட் வகை தடைசெய்யப்பட்ட திட்டங்கள்

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் நியதிகளின் பிரகாரம் தடைசெய்யப்பட்ட திட்டத்தை/திட்டங்களை நிறுவனங்கள் நடாத்துவதாக அத்துடன்/அல்லது நடாத்தியுள்ளதாக இலங்கை மத்திய வங்கிக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதன் அடிப்படையில், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று நிறுவனங்கள் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்றனவா அத்துடன்/அல்லது மீறியுள்ளனவா என்பதனை உறுதிசெய்வதற்கு 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் நியதிகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி விசாரணைகளைத் தொடங்கியது.

(i) Fast 3Cycle International (Pvt) Ltd (F3C)

(ii) Sport Chain App, Sports Chain ZS Society Sri Lanka

(iii) OnmaxDT

1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட பரீட்சிப்புத் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியானது மேற்குறித்த மூன்று நிறுவனங்கள் அத்துடன் மேற்குறித்த மூன்று நிறுவனங்களினதும் பணிப்பாளர்கள், தாபகர்கள் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் சொல்லப்பட்ட சட்டத்தின் 83இ பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக தடைசெய்யயப்பட்ட திட்டமொன்றை நடாத்தினர் அத்துடன்/அல்லது நடாத்தியுள்ளனர் என தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, வங்கித்தொழில் சட்டத்தின் 83இ பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய குற்றவியல் நடவடிக்கைமுறைகளைத் தொடுப்பதை பரிசீலனையிற் கொள்ளுமாறு இலங்கை மத்திய வங்கி கௌரவ சட்டமா அதிபரைக் கோரியுள்ளது.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

☎ (Hotline) 1935 / +94 11 247 7966